மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 01/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | லட்சுமி | நாள் | 13.07.2023 |
| கணவர் பெயர் | மாணிக்கம் | | |

**6, 7 ம் பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை :-**

1) தற்போது எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், என்னுடைய சொத்தை காவேரி உரிமை கோரியதால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து எங்கு உள்ளது என்றால், கோல்நாய்க்கன்பட்டி, மணக்காட்டில் உள்ளது.

2) தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால், தற்போது ஞாபகமில்லை. தாவா சொத்து எனக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால், காவேரியிடமிருந்து கிரயம் பெற்றேன். தாவா சொத்து காவேரிக்கு எப்படி பாத்தியம் என்றால், மேற்படி சொத்து காவோரி வேறொருவரிடமிந்து கிரயம் பெற்ற சொத்து.

3) நான் சொல்வது தவறானது என்றாலும், மேற்படி சொத்து காவேரிக்கு கிரயப்படி பாத்தியப்பட்டதல்ல என்றாலும், மேற்படி சொத்து காவேரியின் கூட்டுக் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பாகம் பிரிக்கப்படாத சொத்து என்றாலும், சரியல்ல.

4) காவேரி தாவா சொத்தை எனக்கு கிரயம் செய்து கொடுத்தபோது மேற்படி சொத்தில் அவருக்குள்ள மூல உரிமை பத்திரத்தை என்னிடம் கொடுத்தாரா என்றால், கொடுத்துள்ளார். மேற்படி மூல பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன்.

5) மேற்படி சொத்தை காவேரி எனக்கு எப்போது கிரயம் செய்து கொடுத்தார் என்றால், தற்போது எனக்கு தேதி, மாதம், வருடம் நினைவில் இல்லை. தாவா சொத்து மொத்தம் எத்தனை செண்ட் நிலம் என்றால், 41 செண்ட் நிலம்.

6) காவேரி தாவா சொத்தை எனக்கு விற்பனை செய்வதற்கு முன்பு அதே சொத்தை என்னிடம் அடமானம் வைத்திருந்தார் என்றால், சரிதான். எவ்வளவு ரூபாய்க்கு

அடமானம் வைத்தார் என்றால், தொகை சரியாக நினைவில்லை. காவேரி தாவா சொத்தை என்னிடம் 20.08.1997ம் தேதியில் என்னிடம் அடமானம் வைத்தார் என்றால், தேதி எனக்கு சரியாக நினைவில் இல்லை. மேற்படி அடமானம் பதிவு செய்யப்பட்ட அடமானம் என்றால், சரிதான்.

7) காவேரி முதன்முதலில் தாவா சொத்தை எனக்கு குத்தகைக்கு கொடுத்தார். பிறகுதான் என்னிடம் தாவா சொத்தை அடமானம் வைத்தார். பின்னிட்டு தான் தாவா சொத்தை எனக்கு கிரயம் கொடுத்தார்.

(6, 7ம் பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.